# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNPSC Group I தேர்வு

பாடம் : சமூகப் பிரச்சனைகள்

பகுதி : **நலிவடைந்தோருக்கான மத்திய மற்றும் மாநில பொதுநலத்திட்டங்கள்**

**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குரூப் - 1 முதல்நிலை மற்றும் முதன்மை தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள், ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**
**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை**

# நலிவடைந்தோருக்கான மத்திய மற்றும் மாநில பொதுநலத்திட்டங்கள்

**வாழ்வாதார திட்டம்**

**தேசிய ஊரக வாழ்வாதார திட்டம் (National Rural livelihood Mission)**

1. ஊரகப் பகுதி வாழ் மக்களின் வாழ்வாதாரத்தை உறுதி செய்யும் பொருட்டு தொடங்கப்பட்ட திட்டம்.
2. தற்போது அஜீவிகா என்றும் வழங்கப்படுகிறது.

**பிரதம மந்திரி சிராமோதயா யோஜனா (2000-2001)**

**நோக்கம்**

கிராமப் பகுதிகளில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக, சுகாதாரம், தொடக்கக்கல்வி, குடிநீர், குடியிருப்பு மற்றும் கிராமச் சாலைகள் ஆகிய ஐந்து துறைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கிறது.

**பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டம் (2000, டிசம்பர்)**

ஒவ்வொரு கிராமத்தையும் நகர்ப்புற சாலைகளுடன் இணைத்தலை நோக்கமாகக் கொண்டது.

**1. கிராமின் ஆவாஸ்**

கிராமப்புறத்தில் ஏழ்மையிலுள்ள மக்களுக்கு குடியிருப்புகளை ஏற்படுத்தித் தருவதையும், வளரும் தேவைக்கு ஏற்ப வீடுகளை அமைத்துத் தருவதலையும் நோக்கமாகக் கொண்டது.

**2. கிராம குடிநீர் திட்டம்**

குடிநீர்த் தேவையை நிறைவு செய்தலையும், குடிநீர் சேமிப்புத் திட்டங்களை ஏற்படுத்துதலையும் மழைநீர் சேகரிப்பு திட்டங்களை மேற்கொள்வதற்கு உரிய ஏற்பாடுகளை செய்கிறது.

25 சதவீத அளவு நிதியை வறட்சி பகுதிகள் மற்றும பாலைவன பகுதிகள் முன்னேற்ற திட்டத்திற்கு பயன்படுத்திக் கொள்ளலாம்.

**ஜன் ஸ்ரீ பிமா யோஜனா (2000)**

1. வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் மக்களுக்காக ”காப்பீட்டு திட்டமாக” கொண்டுவரப்பட்டது.
2. 18 முதல் 60 வயதிற்குட்பட்ட கிராமப்புற மற்றும் நகர்ப்புற மக்கள் பயன்பெறும் வகையில் வாழ்க்கைக்கு பாதுகாப்பு அளிக்கப்பட்டது.

**கிராமக் கைவினைஞர்களுக்கு உபகரணங்கள் அளிப்புத் திட்டம் (SITRA) (1992)**

1. கிராமக் கைவினைஞர்களுக்கு புதிய கருவிகளை அளித்து, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதை நோக்கமாகக் கொண்டது.
2. ஒருங்கிணைக்கப்பட்ட ஊரக வளர்ச்சித் திட்டத்தின் துணை திட்டமாகும்.

1999 ம் ஆண்டு சுவர்ண ஜெயந்தி பொன்விழா திட்டம் வேலைவாய்ப்பு திட்டத்துடன் இணைக்கப்பட்டது.

**சமூக வளர்ச்சித் திட்டம் (1952)**

மக்கள் பங்களிப்புடன், ஊரகப் பகுதியில் அனைத்து விதமான வளாச்சிகளையும் ஊக்குவித்தல்.

**ஊரக வளர்ச்சிக்கான தேசிய நிதி (1984)**

ஊரக வளர்ச்சித் திட்டங்களுக்கான நிதி உதவி வழங்கல்.

**CAPART (1986)**

ஊரகப் பகுதிகளின் வளங்களை அதிகரிக்க உதவுதல்.

**பிரதம மந்திரி கிராம சதக் யோஸனா (2000)**

குறைந்தது 500 பேர் மக்கள்தொகை கொண்ட கிராமங்களில் சாலைகள் அமைத்தல்.

**20 அம்சத் திட்டம் (1975)**

வறுமை ஒழிப்பு மற்றும் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துதல்.

**வறட்சி பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கான திட்டம் (1973-74)**

வறட்சியின் தாக்கத்தை குறைக்கும் பொருட்டு, பயிர் பாதுகாப்பு வழங்கல், நிலத்தின் உற்பத்தி திறனை அதிகரித்தல், போன்றவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கிறது.

**அன்னபூர்ணா திட்டம் (2000)**

1. அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்தல்
2. வயோதிகர்களுக்கு இலவச உணவு தானியங்கள் வழங்குதல்.
3. பொது விநியோகத் திட்டத்தை சீரமைத்தல் மூலம், ஏழைகளுக்கு உணவு தானியங்கள் கிடைக்கச் செய்தல்.

**நிர்மல் கிராம புரஸ்கார் (2003 அக்டோபர்)**

சுகாதார வசதிகளை நல்லமுறையில் செயல்படுத்தும் பஞ்சாயத்துகளை ஊக்குவிக்கும் பொருட்டு தரப்படும் விருது மற்றும் ஊக்கத் தொகையை குறிக்கிறது.

**வால்மிகி அம்பேத்கார் ஆவாஸ் யோஜனா (2001, டிசம்பர்)**

சேரிகளில்வாழும் மக்களுக்கு வீடுகட்டித் தருதல்.

**ராஜிவ் ஆவாஸ் யோஜனா (2010)**

சேரிகள் இல்லா இந்தியாவை உருவாக்குதல்.

**தேசிய ஊரக குடிநீர் திட்டம் (2009) (National Rural Drinking water Programme)**

அனைவருக்கும் "குடிநீர் பெறுவதை" நோக்கமாகக் கொண்டு செயல்படுத்தப்படுகிறது.

**இந்திரா ஆவாஸ் யோஜனா (1985)**

ஊரசப் பகுதிகளில், வறுமை ஒழிப்பில் ஒரு கட்டமாக வீடு கட்டித் தரும் திட்டம் தொடங்கப்பட்டது.

மத்திய மாநில அரசுகளின் நிதி ஒருக்கீடுகள் முறையே 75 : 25

### ராஜீவ் காந்தி கிராமின் வித்யுத்திகரன் யோஜனா (2005)

1. ஊரகப் பகுதியாக கருதப்படும் அனைத்து கிராமங்களிலும், அனைத்து குடியிருப்பு பகுதிகளிலும் ”மின்சார இணைப்பு” வழங்குதல்.
2. மின் இணைப்பு இலவசமாக வழங்கப்படுகிறது.
3. முன்னுரிமை
    - SC, ST குடியிருப்பு பகுதிகள்.
    - வசதியற்ற மக்களின் குடியிருப்புகள்.

### பாரத் நிர்மான் யோஜனா (2005)

ஊரக கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் கொண்டு வரப்பட்டது.

### முக்கியத்துவம் தரப்படும் துறைகள்

1. பாசனம்
2. சாலைகள்
3. மின்சார இணைப்பு
4. குடிநீர்
5. வீடுகள்

### நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம்

### ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் (JRNURM) (டிசம்பர் 3, 2005)

1. தேர்ந்தெடுக்கப்பட்ட நகரங்களில் சீர்திருத்தம் மேற்கொள்வதற்கும். மிக விரைவாக வளர்ச்சி அடையும் பொருட்டும் கொண்டு வரப்பட்ட திட்டமாகும்.
2. நகர்ப்புற கட்டமைப்பு வசதிகளை சிறு மற்றும் நடுத்தர நகரங்களிலும் கொண்டு வருதலையும் நோக்கமாக கொண்டுள்ளது.
3. தற்போது 65 நகரங்களில் இத்திட்டம் செயல்பாட்டில் உள்ளது.

**சமூக நலத் திட்டம்**

**தேசிய சமூக உதவித் திட்டம் / நாட்டு சமூக உதவித் திட்டம் (1995, ஆகஸ்ட் 15)**

ஏழைக் குடும்பத்தினர், வயது முதிர்ந்தோர், வருமானம் ஈட்டும் குடும்பத் தலைவனை இழந்த குடும்பத்தினர், ஊனமுற்றோர் போன்ற சமூகத்தில் நலிந்த நிலையிலுள்ள மக்களின் பாதுகாப்பை வலியுறுத்தும் பொருட்டு கொண்டு வரப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் பல ஓய்வூதியத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

1. தேசிய குடும்ப நலத் திட்டம் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களுக்காக கொண்டு வரப்பட்டது.
2. இந்திரா காந்தி தேசிய முதியோர் ஓய்வூதிய திட்டம்.
3. இந்திராகாந்தி தேசிய விதவை ஓய்வூதிய திட்டம்.
4. இந்திராகாந்தி தேசிய ஊனமுற்றோர் ஓய்வூதிய திட்டம்.

**உடல் நலத் திட்டங்கள்**

**தேசிய ஊரக உடல்நலத் திட்டம் (2005, ஏப்ரல் 12)**

1. ஊரகப் பகுதியில் வாழும் ஏழை மக்களுக்கு, அவர்கள் அணுகக் கூடிய தரமான மருத்துவ சேவையினை வழங்குதல்.
2. சிசு இறப்பு வீதம் (IMR) மற்றும் கர்ப்பிணியப் பெண்கள் இறப்பு வீதம் (MMR) போன்றவற்றை குறைப்பதும் இத்திட்ட நோக்கங்களில் ஒன்றாகும்.
3. அனைத்து நிலைகளிலும், சமூக ஒத்துழைப்புடன் உடல்நல சேவைகள் மக்களை சரியான முறையில் சென்றடையும்படியான செயல்பாடுகளைக் கொண்டதாக இத்திட்டம் திகழ்கிறது.

**பிரதம மந்திரி ஸ்வஸ்தயா சுரக்ஷ யோஜனா (2010)**

உடல்நல சேவைகளில், பகுதிவாரியாக காணப்படும் சமமின்மையை சரி செய்யவும், தரமான மருத்துவக் கல்வி கிடைப்பதை உறுதி செய்யும் பொருட்டும் கொண்டுவரப்பட்ட திட்டமாகும்.

டெல்லியிலுள்ள எய்ம்ஸ் மருத்துவமனை போன்ற 6 கல்வி நிலையங்களை நாடு முழுவதும் உருவாக்கும் நோக்கில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

**புராதனப் பழங்குடி குழுக்கள் வளர்ச்சி திட்டம் : (PTGS)**

இந்தியாவில் 75-இன பழங்குடியினர் உள்ளனர். அவர்கள் 17 மாநிலங்களிலும், 1 யூனியன் பிரதேசமான அந்தமான் நிக்கோபரிலும் உள்ளனர். அவர்களின் வாழ்க்கை முறையும், பொருளாதாரம், குறைந்த தொழில்நுட்பம் உடைய பழைய விவசாய முறையும், குறைந்த கல்வியறிவும் மக்கள் தொகையில் எண்ணிக்கையின் அடிப்படையில் பழங்குடி மக்கள் குறைந்தும் காணப்படுகின்றனர் என பல அடையாளம் கண்டுபிடிக்கப்பட்டு இவர்கள் புராதனப் பழங்குடி குழுக்கள் (PTGS) என மத்திய அரசு வகைப்படுத்தியது மத்திய அரசானது இவர்களின் வாழ்க்கையில் வளர்ச்சி ஏற்படுத்த 1998-99-ல் மொத்த வளர்ச்சியையும், நெகிழ்வும் கொண்ட திட்டம் வகுத்தது அத்திட்டத்தின் மூலம் வீட்டு வசதி, உள்கட்டமைப்பு வளர்ச்சி, கால்நடை அபிவிருத்தி, கல்வி, சுகாதாரம், (நிலம்) காணி வழங்கல் விவசாய வளர்ச்சி, சமூக பாதுகாப்பு, காப்பீடு என அனைத்து விதமான வளர்ச்சி கொண்டத்திட்டமாக மீண்டும் பதினொரவது ஐந்தாண்டு திட்டத்தில் (2007-08) முறைப்படுத்த பாதுகாப்புடன் கூடிய வளர்ச்சி” (CCD) என புது பொழிவு தரும் வேகத்துடன் மாநில அரசாங்கமும், அரசு சாரா அமைப்புகளும் அவர்களின் வளர்ச்சியில் பெரும் பங்கு வகிக்கின்றனர்.

**பழங்குடியின மாணவர் / மாணவியருக்கான விடுதிகள் :**

1. பழங்குடியின மாணவிகள் கல்வி பெற்று மேம்பாட்டு வளர்ச்சிப் பெற மத்திய அரசானது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பழங்குடியின மாணவிகள் விடுதி அமைக்கும் திட்டம் தொடங்கப்பட்டது. இதில் மத்திய அரசானது 50% நிதியும், மாநில அரசானது 50% நிதியும், யூனியன் பிரதேசத்திற்கு மத்திய அரசே 100% நிதியும் வழங்கும் என முடிவு செய்யப்பட்டது. இதனடிபடையில் மாநில மற்றும் யூனியன் பிரதேசத்தில் 1999-2000 ஆண்டில் 29-மாணவியர் விடுதியும், 2000-2001 ஆண்டில் 11 மாணவியர் விடுதிக்கும் நிதி ஒதுக்கப்பட்டது.

2. இந்த மாதிரியான திட்டத்தில் எந்த மாற்றமும் இல்லாமல் மாணவர்களுக்கான விடுதி அமைக்கும் திட்டம் 1989-90-ல் தொடங்கப்பட்டது. இந்த நிதியின் மூலம் 2000-2001- ஆண்டு 15-மாணவர் விடுதி அமைத்து தர நிதி வழங்கப்பட்டது.

**தேசிய பழங்குடி வெளி நாட்டு படிப்புக்கான கல்வி உதவித் தொகைத் திட்டம் :**

1. பழங்குடியின மாணவர்கள் முதுகலை படிப்பு மற்றும் முனைவர் படிக்கு வெளிநாட்டில் சென்று பயின்று வர அரசானது அவர்களுக்கு பயண செலவு, தங்கும் செலவு என அனைத்து செலவையும் ஏற்று கல்வி உதவி தொகையும் வழங்குகிறது.

2. இவ்வுதவி தொகையானது 35 - விதமான துறைகளின் முதுகலைப் படிப்பிற்கும் சேர்க்கப்பட்டுள்ளது.

3. இவை மட்டுமின்றி ஒவ்வொரு ஆண்டும் 15- விதமான பரிசும், உதவிகளும் அளிக்கப்படும்.

4. இத்திட்டம் முதன் முதலில் 1954-55-ல் தொடங்கப்பட்டது தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் வலியுறுத்தலின் வாயிலாக 2007-08-ஆண்டில் மறுசீரமைக்கப்பட்டது.

**தமிழ்நாட்டில் பழங்குடியினர்க்கு அரசின் நலத்திட்டங்கள்**

1. கொத்தடிமை முறை ஒழித்தல்
2. ஒப்பந்த தொழிலாளர் முறை ஒழித்தல்
3. பழங்குடியின் மற்றும் ஆதிதிராவிடர் நலத்துறை விடுதி சிறப்பு வழிக்காட்டி
4. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் +2 தேர்வில் மாவட்ட அளவில் வெற்றி பெற்றவருக்கு முதல் பரிசு ரூ.3,000 2-ம் பரிசு ரூ.500, 10-வகுப்பிற்கு முதல் பரிசு ரூ.1000 2-ம் பரிசு, ரூ.300.
5. காடு வளர்ப்பு திட்டங்கள்
6. அவர்களின் விவசாயத்திற்கு மாணியம் வழங்குதல்
7. விலங்கு வளர்ப்பு - பழங்குடி நலத்திட்டங்கள்

**தமிழக அரசின் திட்டங்கள்**

**பெண்கள் நலத் திட்டங்கள்**

1. 1947 ம் ஆண்டு மகளிர் நலத் திட்டங்களை செயல்படுத்த மகளிர் நலத்துறை ஏற்படுத்தப்பட்டன.

2. 1952 ல் சமூக நலத் திட்டங்களை செயல்படுத்த மத்திய சமூக நல வாரியம் ஏற்படுத்தப்பட்டது.
3. 1954 ல் தமிழக அரசு, மாநில சமூக நல வாரியத்தை அமைத்தது.

**மாநில சமூக நல வாரியம் (1954)**

1. பெண்கள், குழந்தைகள், ஆதி திராவிடர் பழங்குடி மக்கள், அநாதைக்ள போன்றோர் அனைவருக்கும் பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.
2. 1956 ம் ஆண்டு குடும்பநல அறுவை சிகிச்சைத் திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டது.
3. பெண்கள் உரிமைகளை பாதுகாக்க 1990 ம் ஆண்டு "தமிழக மகளிர் ஆணையம்" அமைக்கப்பட்டது.

**திருமண உதவித் திட்டம்**

மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம்

**நோக்கம்**

1. ஏழை பெணிகளின் கல்வி நிலையை உயர்த்தும் பொருட்டும்.
2. ஏழை பெற்றோர்கள் தங்கள் பெண்களின் திருமணத்தை நடத்திடும் பொருட்டும் உதவித் தொகை வழங்கப்படுகிறது.
3. தொடங்கப்பட்ட ஆண்டு : ஜீன் 1989

**உதவி**

1. 10 ம் வகுப்பு வரை முடித்த பெண்களுக்கு - ரூபாய் 25000 மற்றும் 4 கிராம் தங்க நாணயம்.
2. இளங்கலை பட்டம் வரை - ரூபாய் 50000 மற்றும் முடித்த பெண்களுக்கு 4 கிராம் தங்க நாணயம் வழங்கப்படுகிறது.

**தகுதி**

1. பெற்றோர் ஆண்டு வருமானம் 24000 க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.
2. பெண்களின் வயது - 18 முதல் 30 வயது
3. ஒரு குடும்பத்தில் ஒரே ஒரு பெண்ணிற்கு மட்டுமே வழங்கப்படும்.

**ஈ.வே. ரா மணியம்மை நினைவு ஏழை விதவைகளின் பெண்கள் திருமண உதவி திட்டம் (1981-82)**

**நோக்கம்**

ஏழை விதவைகளின் பெண்கள் திருமணம் நடைபெற உதவுதல்.

**அன்னை தெரசா நினைவு அநாதைப் பெண்கள் திருமண உதவித் திட்டம் (1984-85)**

**நோக்கம்**

அநாதைப் பெண்களின் திருமணத்திற்கு நிதியுதவி வழங்கும் திட்டமாகும்.

**டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமணத் திட்டம்**

**நோக்கம்**

விதவைகளுக்கு மறுவாழ்வு அளிக்கும் பொருட்டு, விதவை மறுமணத்தை ஊக்குவிக்கும் வகையில் நிதி வழங்கும் திட்டமாகும்.

**டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி நினைவு கலப்பு திருமண உதவித் திட்டம்**

ஜாதி, மத பேதங்களை ஒழிக்கும் வகையில் நடைபெறும் கலப்பு திருமணங்களும் நிதியுதவி வழங்கும் திட்டமாகும்.

**மகளிர் திட்டம்**

1. சுயஉதவிக் குழுக்கள் அமைப்பின் மூலம், சமூக பொருளாதார அதிகாரமளித்தலை பெண்களுக்கு கிடைக்கச் செய்தல்.
2. 1997 ம் ஆண்டு தொடங்கப்பட்டது.
3. இத்திட்டத்தை தமிழ்நாடு பெண்கள் முன்னேற்ற கழகம் செயல்படுத்துகிறது.

**நோக்கம்**

1. சிறிய பொருளாதார நடவடிக்கைகள் மூலம் பெண்கள் தங்கள் பொருளாதார சமூக நிலையை உயர்த்த வழிசெய்து கொடுத்தல்.
2. சுய உதவிக் குழுக்களை அமைத்து அதன் மூலம் பயிற்சி தருதல்.
3. பயிற்சி முடிந்தபின், தொழில் தொடங்கும் பொருட்டு நிதியுதவி அளித்தல்

## பெண் குழந்தை பாதுகாப்பு திட்டம்

சிவகாமி அம்மையார் நினைவு பெண் குழந்தை பாதுகாப்பு திட்டம் தற்போது முதலமைச்சர் பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டம்.

### நோக்கம்

1. குடும்ப கட்டுப்பாடு திட்டத்தை ஊக்குவித்தல்.
2. பெண் சிசுக் கொலையை ஒழித்தல்.
3. ஏழை குடும்பங்களில் உள்ள பெண் குழந்தைகளின் நல்வாழ்வை உறுதி செய்தல்.

### உதவித் தொகை

ஒரு பெண் குழந்தை எனில் ரூ. 50000, 2 பெண் குழந்தையெனில் ரூ. 25000, ஆண் குழந்தை இருப்பின் இத்திட்டம் அக்குடும்பத்தில் பொருந்தாது.

## பெண் குழந்தைகள் கல்விக்கான திட்டங்கள்

"சத்யா அம்மையார் நினைவு அரசு அநாதைகள் திட்டம்"

### நோக்கம்

- ஆதரவற்ற மற்றும் அநாதை குழந்தைகளுக்கு கல்வி வழங்குதல்.
- இலவச உணவு, உடை, உறைவிடம் மற்றும் மருத்துவ வசதி வழங்கல்.

### உதவி

உறைவிடம், கல்வி, சீருடை, இலவச புத்தகங்கள், நோட்டு புத்தகங்கள், இலவச காலணிகள் மற்றும் மருத்துவ வசதிகள்.

### பயன்பெறுவோர்

1. கைவிடப்பட்ட குழந்தைகள்
2. பெற்றோரில்லாத குழந்தைகள்
3. சிறைக் கைதிகளின் குழந்தைகள்
4. பெற்றோரில் ஒருவரை இழந்த குழந்தைகள்

**பெரியார் ஈ.வெ.ரா நாகம்மமை திட்டம்**

1. சாதி, பிரிவு என்ற பாகுபாடின்றி அனைத்து பெண் குழந்தைகளுக்குமான இலவச கல்வி வழங்கும் திட்டமாகும்.
2. 1989 ம் ஆண்டு தொடங்கப்பட்டது.

**நோக்கம்**

1. பெண் கல்வியை ஊக்குவித்தல்
2. பள்ளி இடைநிற்றலை குறைத்தல்
3. இளங்கலை பட்டபடிப்பு வரை பெண்களுக்கு இலவச கல்வி வழங்குதல்.

**பெண்கள் மகப்பேறு உதவித் திட்டம்**

**டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டம்**

1. 1989 ம் ஆண்டு தொடங்கப்பட்டது.
2. வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள பெண்களுக்கு மகப்பேறு உதவியாக ரூ. 12000 வழங்கப்படுகிறது.

**பெண் (குழந்தை) சிசு பாதுகாப்பு திட்டம் தொட்டில் குழந்தை திட்டம் (1992)**

1. அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு ஆநாதை விடுதிகளில் ”அரசுத் தொட்டில்கள்” ஏற்படுத்தப்பட்டன.
2. சமூக பொருளாதார நிலை காரணமாக பெற்றோரால் கைவிடப்பட்ட பல பெண் குழந்தைகள் அரசுச் தொட்டிலில் சேர்க்கப்பட்டனர்.

**பெண்கள் மேம்பாட்டு திட்டம்:**

சத்தியவாணி முத்து அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம்

**நோக்கம்**

ஆதரவற்ற விதவைகள் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், சமூகத்தில் பின்தங்கிய பெண்கள், உடல் ஊனமுற்ற ஆண்கள் மற்றும் பெண்கள் இவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் பொருட்டும், சுய வேலைவாய்ப்பை உருவாக்கும் பொருட்டு தையல் இயந்திரம் இலவசமாக வழங்கப்படுகிறது.

## தமிழக அரசின் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் திட்டம்

1. தாட்கோ → ஆதி திராவிடர் வீட்டு வசதிக் கழகம், 1974 ம் ஆண்டிலிருந்து செயல்படுகிறது.
2. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரக்கு பட்டப்படிப்பு வரை இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது.
3. பழற்குடியினருக்கான தனி இயக்குனரகம் 2000 ம் ஆண்டு தொடங்கப்பட்டது.
4. "தமிழ்நாடு பழங்குடியினர் நல வாரியம்" 2007 ம் ஆண்டு அமைக்கப்பட்டது.
5. தீண்டாமையை ஒழிக்கவும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு எதிரான கொடுமைகளை அகற்றும் பொருட்டம் 1955 ம் ஆண்டு "உரிமைகள் பாதுகாப்பு சட்டம்" மற்றும் 1989 ம் ஆண்டு "ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு எதிரான கொடுமைகள் தடைச் சட்டம்" ஆகியவை நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளன.

## மாற்றுத் திறனாளிகள் நலத் திட்டம்

1. "1992 ம் ஆண்டு உடல் ஊனமுற்றோருக்கான மறுவாழிவு இயக்குனரகத்தை" தமிழக அரசு அமைத்தது.
2. ஊடல் ஊனமுற்ற குழந்தைகள் கல்வி பெற 25 சிறப்பு பள்ளிகள் மாநிலம் முழுவதும் உள்ளன. அக்குழந்தைகளுக்கு இலவச கல்வி உணவு, உறைவிடம் உதவித் தொகை போன்றவை வழங்கப்படுகிறது.
3. கல்வி நிறுவனங்களிலும், வேலை வாய்ப்புகளிலும் ஊனமுற்றோர்களுக்கு 3% இடஒதுக்கீடு செய்துள்ளது.

## ஆதரவற்றோர் நலத் திட்டம்

1. தமிழக அரசு ஏழை விதவைகள், கைவிடப்பட்ட பெண்கள், ஆதரவற்ற பெண்கள் அதாவது 18 வயது முதல் 40 வயது வரை உள்ளவர்களுக்கு, தாம்பரம், கடலூர், சேலம், திருநெல்வேலி, தஞ்சாவூர், காரைக்குடி போன்ற 6 இடங்களில் சேவை இல்லங்களை ஏற்படுத்தியுள்ளது.
2. 1000 க்கும் மேற்பட்ட அநாதை குழந்தைகள் வசிக்கும் அநாதை இல்லங்களில் நூலகங்களை ஏற்படுத்தும் திட்டம் "ஆனந்தம்" என்ற பெயரில் செய்படுத்தப்படுகிறது. மற்றும் "சத்யா அம்மையார் நினைவு அரசு அநாதைகள் திட்டம்" போன்றவை செயல்படுத்தப்படுகின்றன.

## முதியோர்களுக்கான தமிழக அரசின் நலத் திட்டங்கள்:

### 1. முதியோர் ஓய்வூதிய திட்டம் 1962

60 வயதிற்கு மேற்பட்ட முதியோர்களுக்கு மாதந்தோறும் ரூ. 1000 வழங்கப்படுகிறது.

**பயனாளிகள்**

மகனால் கைவிடப்பட்டவர்கள் அல்லது 20 வயதிற்குட்பட்ட மகன் உள்ள முதியோர்கள்.

**மற்ற பயன்கள்**

1. வருடத்திற்கு இரு முறை இலவச உடை.
2. இலவச சத்துணவு

### 2. அன்னபூர்ணா திட்டம்

வயதானவர்களுக்கு இலவச அரிசி வழங்கும் திட்டம் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

| ஓய்வூதிய திட்டங்கள் | தொடங்கப்பட்ட ஆண்டு |
|---|---|
| முதியோர் ஓய்வூதிய திட்டம் | 1962 |
| உடல் ஊனமுற்றோருக்கான ஓய்வூதிய திட்டம் | 1974 |
| ஆதரவற்ற விதவைகளுக்கான ஓய்வூதிய திட்டம் | 1975 |
| ஆதரவற்ற விவசாய தொழிலாளர்கள் ஓய்வூதிய திட்டம் | 1981 |
| கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் ஓய்வூதிய திட்டம் | 1986 |

**வினாக்கள் :**

1. நலிவடைந்தவருக்கான அரசின் நடவடிக்கைகளில் முக்கியமானவற்றை குறிப்பிட்டு எழுதுக.
2. ஆதாரவற்றோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான தமிழகத்தின் அரசு திட்டங்களைக் குறிப்பிடுக.